**மஹரகம நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹரகம நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனங்களை நிறுத்துவதற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட காணிகளுக்காக பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியுடன் கிடைக்க வேண்டிய ரூபா 99,450 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் செலவினத்திற்காக 2018 சனவரி முதல் மார்ச் வரை செலுத்தப்பட்ட ரூபா 10,420,206 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரத்துச் செய்யப்பட்ட 02 ஒப்பந்த உடன்படிக்கைகளின் பெறுமதியான ரூபா 665,000 தொகை கடன்கொடுத்தோர் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டமையினால் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 18 சாரதிகளிடமிருந்து அறவிடப்பட்ட ஊழியர் பிணை வைப்பு ரூபா 90,000 தொகை ஊழியர் பிணை வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 14 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றின் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 53,668,753 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### பெறவேண்டிய கணக்குகள்

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற தேர்தல் கடமைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,167 தொகை, பெறவேண்டிய பட்டதாரி பயிலுனர் படி ரூபா 20,000 தொகை மற்றும் பெறவேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 14,868,518 தொகை என்பன நடப்பாண்டின் போதும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உணவுப் பாதுகாப்பு தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர்களுக்கு வழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக நகர சபை செலவிட்ட ரூபா 246,615 தொகை 2018 மே வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 48,148,393 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 165 ஆம் பிரிவின் ‘‘இ’’ உபபிரிவு | 4,634,760 | நகர சபை எல்லையில் அமைந்துள்ள ஏதாவது காணியொன்றை கூறிட்டு விற்பனை செய்யும் போது அந்தக் காணியின் விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதத்திற்குச் சமமான வரியொன்று விற்பனையாளரிடமிருந்து அறவிடவேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 10 காணி விற்பனைகளிலிருந்து சபையினால் வருமானப் பரிசோதகரால் மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனைப் பெறுதியில் 1 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் காணிக்கூறுகளின் உள்ளபடியான விற்பனைப் பெறுமதிக்கும் இடையே வேறுபாட்டினை இணக்கஞ் செய்து அந்த வேறுபாட்டை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 177(1) | 442,873 | சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் பணம் நாள்தோறும் அல்லது முடியுமானவரை விரைவாக வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஆதனங்களைத் தடை செய்யும் உத்தியோகத்தர்களினால் சேகரிக்கப்பட்ட நிலுவை ஆதனவரி கட்டணம் கணிசமான காலதாமதத்துடன் சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) நிதிப்பிரமாணம் 188(2) | 9,325 | வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தேறாத 01 காசோலை மற்றும் 03 காசுக் கட்டளைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 607,704 | விநியோகிக்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 65 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 3:1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | 19,132,459 | ஒப்பந்தங்கள் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு 04 ஒப்பந்தங்களை விட ஒரே நேரத்தில் செய்ய முடியாதிருந்த போதிலும் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 192,717,964 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 192,729,139ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

607629 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கு 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது மூடப்பட்டிருந்த போதிலும், காசின் கீழ் 2,052,258 பெயரளவுப் பெறுமதியொன்று மீளாய்வாண்டின் போதும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 95,506 | 87,236 | 70,300 | 54,627 | 89,615 | 97,995 | 70,328 | 60,045 |
| வாடகை | 19,206 | 7,399 | 5,254 | 2,145 | 19,685 | 18,594 | 15,761 | 6,837 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,602 | - | 1,226 | - | 1,072 | 1,023 | 948 | 307 |
| ஏனைய வருமானம் | 25,770 | - | 368,753 | - | 224,886 | 350,751 | 347,241 | 178,502 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

(அ) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதனவரி ரூபா 84,270,534 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 16,428,062 தொகை அதாவது 19 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 57,304,852 ஆக இருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 19,230,383 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் ரூபா 38,074,469 தொகை அதாவது 66 சதவீதம் நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 54,502,531 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 50,000 இனை விஞ்சிய 41 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 3,652,240 தொகையொன்று அறவிடுவதற்கு இருந்தது.

**2.3.3 வாடகை**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 176 கடைகளிலிருந்து ரூபா 4,220,613 தொகையொன்று அறவிடுவதற்கு இருந்ததுடன் அதில் 03 மாதங்கள் முதல் 97 மாதங்கள் வரையிலான காலப்பகுதிக்குரிய 134 கடைகளுக்காக ரூபா 4,102,367 தொகை அறவிட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**(அ) கைவிடப்பட்ட இலக்குகள்**

(i) பன்முகப்படுத்தப்பட்ட உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய ரூபா 400,000 பெறுமதியான 02 செயற்திட்டங்களுக்கு நிதி போதியளவில் இன்மை மற்றும் ஏனைய செயற்திட்டங்களுக்கு நிதி மாதாந்தம் மாற்றம் செய்தல் போள்ற காரணங்களைக் காண்பித்து இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ii) பொது நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வேண்டிய ரூபா 2,871,115 பெறுமதியான 04 செயற்திட்டங்கள் எதிர்ப்புக்கள் எழுந்தமை, ஏனைய செயற்திட்டத்திற்கு நிதியினை மாற்றுதல், காலநிலை காரணங்கள் மற்றும் கையளித்தல் பூரணமாக இன்மை போன்ற காரணங்களைக் காண்பித்து இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

(i) மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் நிதிஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக ரூபா 9,500,000 பெறுமதியான 05 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ரூபா 55,079,556 பெறுமதியான 41 செயற்திட்டங்கள் காலநிலைக் காரணங்களின் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லை விஞ்சாமையின் காரணமாக வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) பெப்பிலியான விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரை மாகாண சபை நிதியத்திலிருந்தும் சபை நிதியத்திலிருந்தும் ரூபா 14,401,828 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) 2017 ஆம் ஆண்டில் வேறு பிரிக்கப்பட்ட 2,340 தொன் கழிவுப்பொருட்கள், வேறுபிரிக்கப்படாத 31,827 தொன் கழிவுப்பொருட்கள் கறதியான கழிவுப்பொருள் தளத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் வேறுபிரிக்கப்பட்ட கழிவுப்பொருள்களின் அளவு தரம்பிரிக்கப்படாத கழிவுப்பொருள் அளவில் 7.3 சதவீதமாக இருந்தது. கழிவுப்பொருள் சேகரித்தல் சரியான பிரகாரம் முகாமை செய்யப்படாமையினால்

ரூபா 23,870,250 தொகை மேலதிகமாகச் செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ii) கழிவுப்பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்காக சபைக்குச் சொந்தமாக 38 வாகனங்கள் காணப்படும் போது 04 தனியார் நிறுவனங்களிலிருந்து போக்குவரத்துச் சேவை பெற்றுக்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 998,850 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

**(அ) மதிப்பிழந்த காசோலை**

வாடிக்கையாளர்களினால் ஆதனவரி செலுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 15,698 பெறுமதியான காசோலைகள் மற்றும் அறிவித்தல் பதாதைக் கட்டணமாக வழங்கப்பட்ட ரூபா 212,472 பெறுமதியான 03 காசோலைகள் என்பன மதிப்பிழந்திருந்த போதிலும், அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வீதி விளக்கு பராமரிப்பு**

2017 ஆம் ஆண்டில் 7369 மின்குமிழ்கள் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், தூண்கள் இலக்கமிடப்படாமை மற்றும் பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாமையினால் ஆண்டின் போது பொருத்தப்பட்ட வீதி விளக்குகளின் எண்ணிக்கையை சரியாக கண்டறிய முடியாதிருந்ததுடன் மின்குமிழ்களின் உத்தரவாதக் காலமும் கேள்விக்குரியதாக இருந்தது.

**(இ) பெறுமதி சேர் வரி**

பெறுமதி சேர் வரி (VAT) சரியாக கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக ரூபா 10,853,753 தொகையான பெறவேண்டிய மீதியொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட்டதுடன் இந்த கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

(அ) 2017 திசெம்பர் இல் உள்ளவாறு சபையின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 05 | 03 | 02 | - |
| மூன்றாம் நிலை | 02 | 01 | 01 | - |
| இரண்டாம் நிலை | 90 | 75 | 15 | - |
| ஆரம்ப நிலை | 287 | 269 | 18 | - |
| ஏனைய | - | 30 | - | 30 |
| மொத்தம் | 384 | 378 | 36 | 30 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 36 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது. அவ்வாறே ஏனைய (அமைய, சமயோசித, தற்காலிக) பதவிகள் என 30 மிகைகள் காணப்பட்டன.

(ii) சிரேஷ்ட நிலையில் 02 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமையின் காரணமாக சபையின் நடவடிக்கைகளை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(iii) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட ஊழியர் ஒருவர் மீளாய்வாண்டின்இறுதிவரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாமையினால் அந்த ஊழியருக்காக செலுத்தப்பட்ட சம்பளத்தை மீளளிப்புச் செய்வதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் நிலுவைகடன் மீதி ரூபா 35,414,692 ஆக இருந்த போதிலும், அதில் 1988 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக சேவையை விட்டுச் சென்ற, இடம்மாற்றலாகிச் சென்ற மற்றும் மரணமடைந்த 39 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,515,167 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகையாளர் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் வாடகை செலுத்துவதிலிருந்து புறக்கணிப்பாராயின் ஒரு தரப்பாக இரத்துச் செய்யும் அதிகாரம் நகர சபைக்குச் சொந்தமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், 06 மாதங்கள் முதல் 97 மாதங்கள் வரை வாடகை தாமதிக்கப்பட்ட கடைகளிலிருந்து வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு அந்தக் கடைகள் நகர சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் குறித்த திகதியில் உள்ளவாறு வாடகை செலுத்தாத சந்தர்ப்பங்களின் போது 10 சதவீத தண்டப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர சபைக்குரிய கொடிகமுவ மலர்ச்சாலையினை வாடகைக்கு வழங்கும் உடன்படிக்கையின் 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் மனித உடலொன்றை மலர்ச்சாலையில் வைக்கின்ற நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற தொகையில் நகர சபைக்கு அறவிட வேண்டிய பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகள், அவை அமைந்துள்ள வீதி மற்றும் இலக்கமிடப்பட்ட வீதி விளக்கு தூண்கள் தொடர்பான விபரங்களை காண்பிக்கின்ற பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை

(அ) நகர சபையினால் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று பேணப்படாமையினால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அளவிடை செய்யப்பட்ட மாயான நிலங்களின் பரப்பளவு சரியாக உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் மயான நிலங்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்குரிய உரித்துறுதி அல்லது கையளித்தல் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) பொருட் பதிவேடு முறையாக பேணப்படாதிருந்ததுடன் வெளித்தரப்பினரிடமிருந்து சபைக்குக் கிடைத்த நன்கொடைகள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

சபையில் உள்ள கொடிக் கம்பங்களை வெளித்தரப்பினருக்கு வழங்கும் போதும், மீளப் பெறும் போதும் அவை பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

(அ) ஹோமாகம பிரதேச சபையினால் 2002 ஆம் ஆண்டில் மஹரகம நகர சபைக்கு வழங்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 02 உழவு இயந்திரங்கள் மற்றும் ரேலர் ஒன்று என்பன சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் 2017 மே 23 ஆந் திகதி சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 535,000 பெறுமதியான தண்ணீர் பவுசர் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2016 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் அகற்றப்பட வேண்டியதாக சிபாரிசு செய்யப்பட்ட 02 வாகனங்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற உழவு இயந்திரத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.5 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

நடப்பாண்டின் பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் மிகை / பற்றாக்குறைகளை முறையான பிரகாரம் பதிந்து அது தொடர்பாக இறுதி அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.6 வாகனப் பயன்பாடு

பயன்படுத்திய எரிபொருள் அளவு மற்றும் பிரயாணம் செய்த தூரம் என்பன நாளாந்த ஓட்ட அட்டவணையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் சம்பவக் குறிப்புப் புத்தகமும் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

(அ) 2010 முதல் 2017 வரையான கால எல்லையில் 122 அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 51,672 பெறுமதியான 189 நூலகப் புத்தங்கள் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான வாகனமொன்று 2017 நவம்பர் 03 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன் ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் அந்த நட்டத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 500,000 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது வருமானத்திற்கும் செலவின விடயத்திற்கும் இடையே நிதிமாற்றங்கள் இடம்பெற்றதன் பின்னரும் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான, செலவின விடயங்களில் 0.65 சதவீதம் முதல் 352.66 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 24,822,000 தொகையான 147 செலவினத் தலைப்புக்களில் மீளாய்வாண்டில் எந்தச் செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றக் கூடிய வகைகளில் செயற்பாடுகள் முறையாக ஒழுங்கமைக்கப்படாதிருந்ததுடன் நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட அலகொன்றாக செயற்படுத்துவதற்கும், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

முகாமைத்துவ, கணக்காய்வு திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டிற்காக 01 கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளில் அதிகரித்துப் பதியப்பட்டிருந்தமை |
| | | (ii) | கணக்குகளில் கைவிடல்கள் இடம்பெற்றமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் உரிய பிரகாரம் அறவிடப்படாமை |
| | | (ii) | வரி மதிப்பீடு உரிய காலத்தில் இடம்பெறாமை |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | வருடான மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை |
| | | (ii) | வருமானங்களுக்கும் செலவின விடயங்களுக்குமிடையே கவனத்தில் கொள்ளக் கூடிய முரண்கள் காணப்பட்டமை |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாமை |
| | | (ii) | இருப்புப் பதிவேடு உரிய பிரகாரம் பேணப்படாமை |
| | | (iii) | உரிய பிரகாரம் இருப்பு மெய்மையாய்வு இடம்பெறாமை |
| (உ) | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | மீதி உறுதிப்படுத்தல் போதியளவான பிரகாரம் இடம்பெறாமை |
| | | (ii) | நிலுவை மீதி தீர்க்கப்படாமை |
| (ஊ) | உள்ளகக் கணக்காய்வு | (i) | உள்ளகக் கணக்காய்வு முறையாக இன்மை |
| | | (ii) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை |